Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

Registered as a Newspaper

# உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆனி மீ 7 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 23 (21 – 06 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 176

## யாழ். குடாநாட்டில் மீண்டும் ஊரடங்கு

### இன்று காலை 8 மணி வரை

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். குடாநாட்டில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக யாழ்ப்பாணம் வானொலி நேற்று அறிவித்தது.

நேற்று சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை யாழ். நிர்வாக மாவட்டம் முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட ராணுவ இணைப்பதிகாரி இந்தஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை 'யாழ்ப்பாணம் வானொலி' என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட அந்த ஒலிபரப்பு, இப்போது 'இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண ஒலிபரப்பு, என்று அறிமுகப்படுத்தியுள்ளது.

## தெல்லிப்பளையில் ப. நோ. கூ. சங்கத்தின் களஞ்சியம் சேதம்

காங்கேசன்துறை, ஜூன் 21

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்தின் மீது வெள்ளி இரவு அடுத்தடுத்து பல ஷெல்கள் வீழ்ந்ததால் சங்க களஞ்சியம் பலத்த சேதமடைந்தது. சுமார் 2 லட்ச ரூபாவரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

அரிசி, சீனி, மா போன்ற பல்வேறு பொருள்கள் சேதமடைந்தன. அரிசி, மா சாக்குகளுக்குள் ஷெல் துண்டுகள் புகுந்து காணப்பட்டன.

ஷெல் விழுந்த பகுதியை தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசாவும், வலி–வடக்கு உதவி அரச அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரமும் நேற்று பார்வையிட்டனர்.

இந்த ஷெல் தாக்குதலில் தெல்லிப்பளை பொதுநூலகம், மற்றும் பல வீடுகளும் பலத்த சேதமடைந்தன. (உ–68)

## பன்மதவாச்சியில் கண்ணிவெடித் தாக்கு! பல படையினர் பலி!!

யாழ்ப்பாணம், ஜூன்21

பன்மதவாச்சிக்கும், மொறவேவாவிற்கும் இடையில் ட்ரக் வண்டி சகிதம் நடந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ட்ரக்கில் வந்த ஐந்து இராணுவத்தினரும், பின்னால் வந்த பல படையினரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும்—

பலர் படுகாயமடைந்ததாகவும் புலிகள் அறிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழனன்று மாலை 5 மணியளவில் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது. [உ]

## விடுதலைப் போரை அங்கீகரிக்கக் கோரி உண்ணாவிரதப் போர்

யாழ்ப்பாணம், ஜூன் 21

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்கக் கோரியும்-

விடுதலைப் புலிகளுக்கு ஆயுத உதவி வழங்க வேண்டும் என்று கோரியும் நேற்றுப் பல இடங்களில் உண்ணாவிரதம் நடைபெற்றது.

நேற்று உரும்பராய் ஞானவைரவர் கோவில், கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் கோவில், நவாலி சென் பீற்றர் தேவாலயம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், மல்லாகம் ஆகிய பகுதிகளில் உண்ணாவிரதம் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இன்று தாவடிப்பிள்ளையார் கோவில், இணுவில் கந்தசாமி கோவில், கல்வியங்காடு இலங்கத்தை அம்மன் ஆலயம் ஆகிய இடங்களில் உண்ணாவிரதம் நடக்கும் எனவும் அறிவிக்கப்படுகிறது. (உ)

### சுபநேரம்

21-06-1987

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:–
8.54 முதல் 10.24 வரை

ராகுகாலம்:–
4.24 முதல் 5.54 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

★ இரண்டு வார இடைவெளியின் பின் மீண்டும் ஆரம்பம்

# யாழ்நகர், உடுவிலில் விமானக் குண்டுவீச்சு

## ஒருவர் மரணம்; பல வீடுகள் கட்டடங்கள் தரைமட்டம்

### கொட்டடி நமசிவாய வித்தியாசாலை சேதம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம், உடுவில் பகுதிகளில் நேற்று நான்கு பொம்மர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இந்தத் தாக்குதலினால் ஒருவர் உயிரிழந்தார். பல வீடுகளும் பெரிய கட்டடங்களும் இடிந்து நொருங்கின.

நேற்று மாலை சரியாக நான்கு மணி அளவில் யாழ் நகர் மீது வட்டமிட்ட இரண்டு விமானங்கள் கொட்டடிப் பகுதியில் கொடூரத் தாக்குதல்களை நிகழ்த்தின.

இதனால் கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலையும், இதனையடுத்துள்ள பல வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

'லைடன் காமன்ஸ்' கட்டடமும் இத் தாக்குதலினால் சேதமடைந்தது.

குண்டுகள் விழுந்து வெடித்த இடங்களில் இருந்து ஒரே புகை மண்டலம் கிளம்பியது.

நமசிவாயம் வித்தியாசாலைக்கு முன்பாக உள்ள — பல் வைத்தியர் திரு. பாரதி என்பவருக்குச் சொந்தமான—மாடி வீடும் முற்றாக தகர்க்கப்பட்டுள்ளது.

கே. கே. எஸ். வீதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டடமும் இத் தாக்குதலில் சேதமானது.

கொட்டடிப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் இளைஞர் ஒருவர் வயிறு பிளந்த நிலையில் கொல்லப்பட்டார்.

கொட்டடியில் நடந்த குண்டு வீச்சைத்தொடர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



சிவில் ஆட்சி நடத்தப் போறதாய்ச் சொல்லிச்சினம்; அப்ப அந்த ஆட்சி உப்பிடி ஆகாய ஆட்சியாய்த்தான் இருக்குமோ......

## அவசர சிகிச்சை பெற இன்று எம். ஜி. ஆர். அமெரிக்கா பயணம்

சென்னை, ஜூன் 21

தமிழ் நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் இன்று ஞாயிறு அவசர வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்கா செல்கிறார்.

யு. என். ஐ. செய்தி ஸ்தாபனத்தை மேற்கோள் காட்டி சென்னை வானொலியின் மாநிலச் செய்தி இப்படி அறிவித்தது.

இந்திய ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னரே திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அமெரிக்கா செல்வார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

திடீரென்று உடல் நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்தே முதலமைச்சரை உடனடியாக அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கும் முடிவு எடுக்கப்பட்டது.

முதலமைச்சர் கடும் சுகவீனமுற்றிருக்கின்றார் என்ற செய்தி வெள்ளிக்கிழமை சென்னை நகரிலும் சுற்றுப்புறங்களிலும்பரவியதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

சென்னை நகரில் வாகனப் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதுபோன்று வெளியூர்களிலும் நிலைமை பதற்றமாக இருந்ததாக செய்திகள் தெரிவித்தன. (உ–எ)

## கைதான மீனவர் அன்பளிப்புகளுடன் வீடு திரும்பினர்!

காங்கேசன்துறை, ஜூன் 21

கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது கடற்படையினரிடம் அகப்பட்டவர் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். அவருக்கு அரை மூடை அரிசியும், அரை மூடை மாவும் இராணுவத்தினர் அன்பளிப்பாகக் கொடுத்தனர்.

மயிலிட்டி திருப்பூர் ஒன்றியத்தைச் சேர்ந்த உமாபதி ஜெயவீரசிங்கம், முருகுப்பிள்ளை தேன்கிளி ஆகிய இருவரும் கடந்த ஞாயிறன்று சிறு தொழில் செய்வதற்காக கடலுக்குச் சென்றனர்.

அச்சமயம் இவர்கள் சென்ற படகு கடற்படையினரின் கண்களில் பட்டுவிடவே அவர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நகர மக்கள் மத்தியில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூன்21

நேற்று யாழ்ப்பாண வானொலி திடீரென அறிவித்த ஊரடங்கு உத்தரவை அடுத்து யாழ்நகர மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ? என்ற பீதியில் மக்கள் காணப்பட்டனர்.

சில பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர். (உ)

# இந்திய உதவிப் பொருள்களை பொறுப்பேற்க அரச அதிபர் குழு நிபந்தனை

## உயரதிகாரிகளுக்கு எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

காங்கேசன்துறையில் நிலைமை சுமுகமாக இருந்தால் மட்டுமே இந்திய நிவாரணப் பொருள்களைப் பொறுப்பேற்று விநியோகிக்க முடியும்.

இவ்வாறு கொழும்பு சென்ற யாழ். அரச அதிபர்குழு, உயர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளது.

இந்தியக் கப்பல்களில் வரும் உணவுப் பொருள்களை பொறுப்பேற்று விநியோகிக்குமாறு அரச உயரதிகாரிகள் கொழும்பில் கேட்டுக்கொண்ட போதே குழு இவ்வாறு தெரிவித்ததாம்.

அண்மையில் கடமை நிமித்தம் இராணுவ முகாமுக்குச் செல்ல முயன்ற யாழ். செயலக மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகள்மீது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது குறித்தும் குழு உயர் அதிகாரிகளிடம் முறையிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ–எ)

### இந்தியக் கப்பல் புதன்கிழமை புறப்பாடு

கொழும்பு, ஜூன் 21

இந்திய நிவாரண உதவிகளைக் கொண்ட முதலாவது கப்பல் சென்னை துறைமுகத்தில் இருந்து எதிர்வரும் புதன்கிழமை புறப்படும்.

இப்படி ஸ்ரீலங்கா வானொலி நேற்றுக் காலை அறிவித்தது. (உ–எ)

### ஹமீது திரும்பினர்

புதுடில்லி, ஜூன் 21

ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் ஜனாப் சாகுல் ஹமீது நேற்று புதுடில்லியில் இருந்து கொழும்பு புறப்பட்டார்.

இந்திய அமைச்சர் என். டி. திவாரி விமான நிலையத்துக்கு வந்து அவரை வழியனுப்பி வைத்தார். (உ–எ)

### 18 அகதிகள் நேற்று வந்தனர்

சென்னை, ஜூன் 21

பதினெட்டு யாழ் அகதிகள் நேற்று நாகபட்டினம் வந்தடைந்தனர்.

இதனிடையில் மண்டபம் அகதிமுகாமில்தங்கி இருந்த சுமார் 200 அகதிகள் நாகபட்டினம் வந்துசேர்ந்தனர். (உ–எ)

### ஆஸ்பத்திரிக்கு முன் ஷெல்

வல்வெட்டித்துறை, ஜூன் 21

நேற்றுக் காலை முள்ளி முகாமிலிருந்து சிப்பாய்களால் ஏவப்பட்ட ஷெல் குண்டு வரணி அரசினர் வைத்தியசாலை முன்பாக விழுந்து வெடித்து சிதறியது.

வைத்தியசாலையில் இருந்த நோயாளர்கள் ஏற்கனவே வெளியேறி விட்டதால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. (உ–எ–160)

## 5 லட்சத்து 70 ஆயிரம் பேருக்கான

# உணவு முத்திரைகள் நேற்று யாழ் வந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 5 லட்சத்து 70 ஆயிரம் மக்களுக்கான உணவு முத்திரைகள் நேற்று யாழ் செயலகம் வந்து சேர்ந்தன.

கடந்த வாரம் கொழும்பு சென்றிருந்த அரச அதிபர் நேற்று இந்த முத்திரைகளை தம்முடன் கொண்டுவந்திருந்தார்.

இந்த மாதம் முதல் தொடர்ந்து ஒரு வருடத்திற்கான உணவுப் பொருள்களை இந்த முத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முள்ளி முகாமிலிருந்து முன்னேறுவதற்கு முயற்சி

## புலிகள் திருப்பியனுப்பினர்

வல்வெட்டித்துறை, ஜூன் 21

முள்ளி முகாமில் நிலைகொண்டுள்ள சிப்பாய்கள் நேற்றுக் காலை 10 மணியளவில் கொடிகாமம் பக்கமாக முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் நிகழ்த்தி அவர்களைத் திருப்பி அனுப்பினர்.

இதற்கு முன்னர் அந்த வீதி வழியால் சென்ற சகல வாகனங்களும் முள்ளி முகாமிற்கு முன்னால் மறிக்கப்பட்டு பயணிகள் அனைவரும் வாகனங்களில் இருந்து இறக்கிவிடப்பட்டனர்.

அவ்வழியே சைக்கிளில் வந்தவர்களுடன், பயணிகள் -வயோதிபர், சிறுவர், பெண்கள் என்ற வேறுபாடின்றி – கடும் வெயிலில் 4 மணிநேரம் நிற்கவைக்கப்பட்டனர்.

பயணிகள் வந்த இ. போ. ச. பஸ்களில் ஏறிய

(4ஆம் பக்கம் பார்க்க)

### வீமன்காமம், மாவிட்டபுரத்தில்

## புல்டோசர்களினால் உருவாகும் பாதைகள்

காங்கேசன்துறை, ஜூன் 21

வீமன்காமம், மாவிட்டபுரம் பகுதிகளில் தங்கியுள்ள இராணுவத்தினர் தமது போக்குவரத்து வசதிக்காக புதியபாதைகளை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

புல்டோசர்கள் மூலம் இப்பாதைகள் உருவாக்கப்படும்போது பல வீடுகள், மதில்கள், கட்டடங்கள் சேதமடைவதாகவும் கூறப்படுகிறது.

மாவிட்டபுரம், கீரிமலை வீதயில் சில வீடுகளை புல்டோசர்கள் கொண்டு தகர்ப்பதில் இராணுவம் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (உ–68)

### சிவா பயணம்

சென்னை, ஜூன் 21

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் ஸ்கண்டிநேவிய நாடுகளுக்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கின்றார்.

டென்மார்க், சுவீடன், நோர்வே நாடுகளில் உள்ள தமிழர் அமைப்புப் பிரதிநிதிகளை திரு. சிவசிதம்பரம் சந்தித்துப் பேச்சுக்கள்நடத்துவார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

இன்றைய இக்கட்டான சூழ்நிலை சாரணமாக த. குமாரசாமி ரெக்ஸ்ரைஸ் தற்காலிகமாக 352, (272), நாவலர் வீதியில் வழமையான விற்பனைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வாடிக்கையாளர்களின் ஜவுளி தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதை அறியத்தருகிறோம். [3207]

ஒத்துழைப்பை அடிப்படையாகக்கொண்ட சோவியத் ரஷ்யா வினதும் சுரண்டலை அடிப்படையாகக்கொண்ட ஜார் ரஷ்யா வினதும் இருவகையான அரசியல் முறைகளைப்பற்றிய அடிப்படை அறிவைப் பெற, நம் நாட்டின் புரட்சி இயக்கத்தின் அனுபவமிக்க அங்கத்தவரும், சட்டத்தரணியுமான த. துரைசிங்கம் எழுதிய "லெனினும் ஆசியாவும்" என்ற நூலைப் படியுங்கள். இந்நூலின் தமிழ், சிங்கள ஆங்கிலப் பதிப்புகள் புத்தகசாலைகளில் கிடைக்கும். விலை ரூபா 10/- சோஷலிச ஆய்வுக்கழகம் 31. வில்சன் வீதி, கொழும்பு-12. (1425)

**சேவை**

சேலைகள் அச்சிடுதல், தையல் வேலைகள் புதிய பழைய கிளை ஸ்தாபனங்கள் விளம்பரப் படுத்தும் அறிவித்தல்களை எழுதவும் பழைய சேலைகளுக்குப் புதுப்பொலிவுடன் தேவையான டிசைன்களில் அச்சிடுவதற்கும் நவீன தையல் வேலைகளைச் செய்யவும், கோவில் திரைச் சீலை விளம்பரச் சீலைகளைத் தேவையான விதத்தில் எழுதவும், பாதுகாப்பான சூழலில் அமைந்த இடம்.

வசந்தா ரெக்ஸ்ரைல்ஸ் 42, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (1434)


★ வடமராட்சி, வலிகாமத்தில்

# 60 ஆயிரம் மாணவர்கள் நேரடியாகப் பாதிப்பு

பலாலி, ஜூன் 21

அண்மைக்கால வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் நடைபெற்ற அசம்பாவிதங்களினால் 60 ஆயிரம் மாணவர்களும், ஆயிரத்து ஐந்நூறு ஆசிரியர்களும் நேரடியாகவே பாதிப்படைந்துள்ளனர்.

—இவ்வாறு யாழ் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் தெரிவித்தார்.

பாடசாலைகள் இயங்காது மூடப்பட்டிருத்தல், பாடசாலைகள் இராணுவ முகாமாக்கப்பட்டிருத்தல், பாடசாலைகள் சேதமுற்றுள்ளமை, மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ளமை, பயங்கரவாத சந்தேக நபர்கள் என்ற பெயரில் டலர் கைது செய்யப்பட்டமை போன்ற காரணங்களினாலேயே இவ்வகைப்பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதென அவர் தெரிவித்தார்.

இத்தகைய நிகழ்வுகளால் யாழ்ப்பாணத்துக் கல்விநிலையில் ஒருபெரிய தேக்கநிலை ஏற்பட்டுள்ளதென்றும்—

இதனைச் சீராக்குவதற்கு நீண்டகாலமெடுக்கும் என்றும் —

பொதுவாக இதனால் ஒருதலைமுறையின் கல்வி நிலையே சீர்குலைந்துவிடும் அபாயம் தோன்றியுள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-119)

## வட்டுக்கோட்டையில் ரூ. 75 ஆயிரம் பெறுமதியான காசுக்கட்டளைகள் தேக்கம்

வட்டுக்கோட்டை, ஜூன். 21

வட்டுக்கோட்டை தபாற்கந்தோரில் சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான காசுக்கட்டளைகள் (மணிஓடர்கள்) கடந்த ஜனவரி மாதம் முதல் மாற்றப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன.

மணியோடர்களுக்கு உரியவர்கள் தினமும் இக்கந்தோருக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

உரிய தபாற்கந்தோரில் இருந்து இக்கந்தோருக்கு பணம் அனுப்பி வைக்கப்படாமையினாலேயே இத்தபாற் கந்தோரின் தபாலதிபர் மணியோடர்காரருக்கு "பணம் இல்லை" என்று கையை விரிக்கவேண்டியுள்ளது.

இம் மணியோடர்கள் மாற்றப்படாமையினால் காலம் செல்ல அவை காலாவதியாகி செல்லுபடியற்றவையாகி விடும் நிலை உருவாகியுள்ளது. (உ-161)

## எரிபொருள் முகவர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வட பிராந்திய எரிபொருள் விற்பனை முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணி அளவில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய பணிமனையில் நடைபெறவுள்ளது.

சகல எரிபொருள் விற்பனை நிலைய முகவர்களையும் தவறாது சமுகம் அளிக்கும்படி பிராந்திய முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பரீட்சார்த்திகள் விவரம் சேகரிப்பு

குடாநாட்டிலிருந்து லண்டன்சிற்றியாங்கில்ஸ் பரீட்சைக்கு விண்ணப்பித்து, அப்பரீட்சைக்குத் தோற்ற முடியாது போனவர்கள், தங்களது பெயர் மற்றும் விவரங்களை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்தின் இயக்குநருக்கு எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

குடாநாட்டில் கடந்த மாதம் பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்கு மற்றும் அசாதாரண சூழ்நிலைகளினால் பல பரீட்சார்த்திகள் கொழும்புக்குச் சென்று இப்பரீட்சைக்குத் தோற்ற முடியாது போயிற்று. (உ)

## 1954க்குப் பின்னர் பிறந்தவர்களுக்கு அத்தாட்சிப் பத்திரம் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன்21

1954 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்க முடியாத நிலையில் யாழ் செயலக ஊழியர்கள் உள்ளனர்.

1954 ஆம் ஆண்டுக்கு முன் பிறந்தவர்களுக்கான அத்தாட்சிப் பத்திரங்கள் ஒரு பக்கத்தில் மட்டுமே விடயங்களைக் கொண்டுள்ளன.

1954 இற்குப் பின் பிறந்தவர்களின் அத்தாட்சிப் பத்திரங்கள் இரு பக்கங்களிலும் விடயங்களைக் கொண்டவை.

இரு பக்கங்களையும் கொண்ட இந்தப் படிவங்கள் யாழ் செயலக களஞ்சியத்தில் போதியளவு இல்லை.

ஊழியர்களும்கொழும்பு சென்று படிவங்களை எடுத்துவர அஞ்சுகின்றனர்.

கடந்த வருடம் ஜூன் மாதத்திற்கு பின்னர் இந்தப் படிவங்கள் கொழும்பிலிருந்து வரவில்லை.

—இவ்வாறு யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (உ-எ)

## உரமூடைகள் பாதுகாப்பு அரணில்

அராலி, ஜூன் 21

கடந்த வாரம் கீரிமலை சமநல சேவை நிலையத்தின் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்த இராணுவத்தினர் உரக்களஞ்சியத்தில் அடுக்கப்பட்டிருந்த உரமூடைகளை எடுத்துச் சென்று தமது பாதுகாப்பு அரணுக்கு — மண்மூடைகளுக்குப் பதிலாக — பாவித்துள்ளனர்.

மிகுதியாக விடப்பட்டிருந்த உரமூடைகளை பெரும்பாக உத்தியோகத்தரும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் தற்போது வேறு இடத்திற்கு மாற்றியுள்ளனர்.

இவர்கள் பாதுகாப்பு அரணில் இருந்த உரமூடைகளை ஏற்றுவதற்குச் சென்ற போது இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் சில அருகில் விழுந்து வெடித்ததாகவும்—

இதனால் அவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டுத் திரும்பியதாகவும் கூறப்படுகிறது.

கீரிமலை சமநல சேவை நிலையம் தற்போது அளவெட்டியில் அமைந்துள்ள பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் காரியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. (உ)

★ அரசியல் கைதிகளை

## ஐ. நா. அமைதிப்படை பொறுப்பில் வைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 21

சகல அரசியல் கைதிகளும் ஓரிடத்தில் ஐ. நா. அமைதிப் படையின் பொறுப்பில் வைக்கப்படவேண்டும்

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிய மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மகஜரின் சிறையில் வைக்கப்பட்டுள்ள எல். முருகானந்தம், எல். ஜோன்மேரி, எஸ். ஜெயநேசன், து. கிருஷ்ணன் ஆகியோர் இம்மகஜரை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

அரசியல் கைதிகள்மீது கொலை முயற்சிச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. படுகொலைகள் சம்பவங்களும்இடம் பெற்றுள்ளன.

சர்வதேசஜூரர்சபை, ஐ. நா. மனித உரிமைக் குழு, செஞ்சிலுவைச்சங்கம், சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட குழு இச்சம்பவங்களை விசாரிக்கவேண்டும்,

இப்படி மகஜரில் மேலும் கோரப்பட்டுள்ளது.

பூஸாவில் அண்மையில் 7 தமிழ்க் கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவமும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கடனுதவி

சங்கானை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அதன் அங்கத்தவர்கள் சுய தொழில் வாய்ப்புப் பெறுவதற்கு கடன்வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறது

இதுவரை இச்சங்கம் சுமார் 50 ஆயிரம் ரூபாவை அதன் அங்கத்தவர்களுக்குக் கடனாக வழங்கியுள்ளது.(உ-161)

## அராலிப் பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஆர்வம்

அராலி, ஜூன் 21

தற்போது அராலிப் பகுதியில் இதுவரை 122 ஏக்கர் பரப்பளவில் பம்பாய் வெங்காயம் செய்கைபண்ணப்பட்டுள்ளது.

தற்போது கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுவதால் விவசாயிகள் சிரமமின்றிப்பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

நாட்டின் சூழ்நிலை, எரிபொருட் தட்டுப்பாடு ஆகியவை காரணமாக பயிர்ச் செய்கையைக் கைவிட்டு இருந்தவர்கள் கூட விவசாயத்தில் இம்முறை ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மக்களுக்குத் தேவையானதான சிறுதானியப் பயிர்களான — பயறு, குரக்கன், கௌபி, சோயாஅவரை போன்றவற்றைப் பயிர் செய்வதிலும் கூடிய ஆர்வம் காட்டுமாறு சமநல சேவை உத்தியோகத்தரும் அராலி உணவு உற்பத்திக் குழுவினரும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். (உ)

## மணி விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன்21

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமை காரணமாக இம்மாத இறுதியில் நடைபெறவிருந்த மல்லிகைஜீவாமணிவிழா பிற்போடப்பட்டுள்ளது.

இந்த வைபவத்தை நிலைமை சீரடைந்ததும் விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

— இவ்வாறு மணிவிழாக் குழுவின் செயலாளர் திரு. நா. சோமகாந்தன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## அச்சுவேலிக்கு மீண்டும் மின் இணைப்பு

அச்சுவேலி, ஜூன் 21

அச்சுவேலிப் பகுதியில் சேதப்படுத்தப்பட்ட வீதி மின் இணைப்புக்கள் தற்போது மீண்டும் திருத்தி அமைக்கப்படுகின்றன.

அச்சுவேலிப் பகுதி மீது இராணுவத்தினர் மேற்கொண்ட அகோர ஷெல் தாக்குதல்களினால் வீதி மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டன. இதனால் அச்சுவேலிப் பகுதிக்கான மின்சார விநியோகம் முற்றாக வெட்டப்பட்டது.

கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் அச்சுவேலி முற்றாக இருளில் மூழ்கியது.

தற்போது யாழ் அபிவிருத்திச் சபையின் அச்சுவேலி உபஅலுவலக மின்சாரப் பகுதியினர் வீதி மின் இணைப்புக்களைச் சீர்செய்து பாவனையாளர்களுக்கு மின்சார விநியோகம் செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (உ-11)

## ஸ்ரீராமகிருஷ்ணர் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன்21

பேராசிரியர் ப. சந்திரசேகரம் எழுதிய "ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தத்துவம்" என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று மாலை 4.15 மணிக்கு திருநெல்வேலி ராமகிருஷ்ணலயத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. வே. ந. சிவராஜா நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) சிறப்புரையும் நூல்வெளியீடும் நிகழ்த்துவார்.

ராமகிருஷ்ணலய நிர்வாக இயக்குநர் திரு. இரா. மகேந்திரசிங்கம் பதிலுரை நிகழ்த்துவார். (உ)


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## நிதி உதவி

வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட பொதுமக்களின் மரணச் சடங்குகளுக்கென்று நிதி உதவி வழங்க புனர்வாழ்வு அமைச்சு தீர்மானித்துள்ளது

இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் ஆயிரத்து ஐந்நூறு ரூபா விதம் வழங்கப்படும் என்றும் அமைச்சுச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ தெரிவித்தார். (உ-எ)

## வாகன உரிமையாளர் அனுமதிப் பத்திரம் பெறுவதில் சிரத்தை

யாழ்ப்பாணம், ஜூன் 21

கடந்த 3 வாரங்களில் ஆயிரத்து 500 வாகனச் சொந்தக்காரர்கள் இவ்வருடத்திற்கான வாகன அனுமதிப்பத்திரங்களை யாழ் செயலகத்தில் பெற்றுள்ளனர்.

இந்த வருடத்தில் அனுமதிப்பத்திரம் எடுப்பதற்கான கால எல்லை இம்மாதத்துடன் முடிவடைவதாலும்-

வடமராட்சி அசம்பாவிதங்களினால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களாலும் வாகனச் சொந்தக்காரர்கள் செயலகத்திற்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

இந்த மாத ஆரம்பம் வரை 4 ஆயிரம் வாகனச் சொந்தக்காரர்களே யாழ் செயலகத்தில் இவ்வருட வாகன அனுமதிப் பத்திரங்களை பெற்றிருந்தனர் என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதிப்பத்திரங்களைப் பெறாத வாகனச் சொந்தக்காரர்களிடம் வருடாந்த கட்டணத்துடன் அதன் 30 வீதம் தண்டமாக அறவிடப்படும்.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-எ)

## சிப்பாய்களின் பண்பு

கொடிகாமம், ஜூன் 21

ஆனையிறவு, பரந்தன் முகாம்களைத் தாண்டி வரும் பஸ்களில் பயணம் செய்வோரை சோதனையின்போது சிப்பாய்கள் மிகவும் பண்பாக நடத்துகின்றனர்.

வயோதிபர், சிறுவர், பெண்களை வாகனங்களை விட்டு இறங்கவேண்டாம் எனவும் சிப்பாய்கள் கேட்டுக்கொள்கின்றனர். (உ-எ-75)

## தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இப்படி ஒரு நிவாரணம்

கொழும்பு, ஜூன் 21

தீவிரவாதிகளினால் கொல்லப்பட்ட அல்லது தீவிரவாதச் செயல்களின் போது காணாமற் போன சமயா சமய, தற்காலிக அரசு ஊழியர்கள் — நிரந்தர, ஓய்வூதியம் பெறும் ஊழியர்களாகவே கருதப்பட்டு நிவாரணம் வழங்கப்படும்.

சேவை புரிந்த வருடங்கள் கணக்கெடுக்கப்படாமல் சேவைக்கால பணம் பெறும் தகுதியையும் அவர்கள் பெறுகின்றனர்.

இத் திட்டம் இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் என்று பொதுநிர்வாக அமைச்சுச் செயலாளர் திரு. டி. பி. ஐ. பி. எஸ். சிரிவர்த்தன சுற்று நிருபம் மூலம் அறிவித்திருக்கிறார்.

அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றுக்கு இச் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் திருமணமாகாத நிரந்தர ஊழியரில் (பெற்றோர்கள், 18 வயதுக்குட்பட்ட சகோதரர் அல்லது திருமணமாகாத, தொழில் இல்லாத சகோதரிகள்) தங்கியிருப்போருக்கு அந்த ஊழியர் 55 வயதடையும் வரை பெற்றிருக்க வேண்டிய சம்பளம் மற்றும் அலவன்ஸ் முதலியன வழங்கப்படும்.

இந்த நிவாரணம், அமைச்சு நிதியில் இருந்தே வழங்கப்பட வேண்டும். இறைசேரியில் இருந்து மேலதிகமாக இதற்கு நிதி பெறக் கூடாது.

— இப்படி பொதுநிர்வாகத்துறை அமைச்சுச் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

## இராணுவ நடவடிக்கை; நிறுத்துமாறு கோரி எதிர்ப்புத் தினம்

கொழும்பு, ஜூன் 21

இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்-

இக்கோரிக்கையை முன்வைத்து அடுத்த மாதம் 15 ஆம் திகதி தேசிய எதிர்ப்பு தினத்தை நடத்தப் போவதாக 25 தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு இது.

எதிர்ப்பு நடவடிக்கைகளின் விவரம் இறுதி நேரத்தில் தான் வெளியிடப்படும் என்று தொழிற் சங்கத் தலைவர் ஒருவர் தெரிவித்தார். (உ-எ)

## இடம் மாற்றம்

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் மல்லாகம் உப அலுவலகக் கட்டடத்திற்குஇடம் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

வேறு சில அரச அலுவலகங்களும் தெல்லிப்பளையிலிருந்து மல்லாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. (உ)

★

அச்சுவேலி, ஜூன் 21

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமுற்ற அச்சுவேலி தபால் நிலையம் கடந்த புதன்கிழமை முதல் ஆவரங்கால் உப தபால் அலுவலகத்தில் செயற்படுகிறது.

பொதுமக்கள் உபதபால் அலுவலக கரும பீடத்தில் தமக்குரிய கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அச்சுவேலி தபால் அதிபர் திரு. எஸ். சிவக்கொழுந்து தெரிவித்துள்ளார்.

## விளையாட்டுத்துறைக்கு அரும்பணியாற்றியவர்

### அமரர் சாறிக்கு இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் எஸ். ரி. சாறி வடக்கின் விளையாட்டுத்துறைக்கு ஆற்றிய பணி அளப்பரியது.

— சங்கத்தின் செயலாளர் காப்டன் என். சோமசுந்தரம் அமரர் சாறியின் மறைவையொட்டி வெளியிட்ட இரங்கற் செய்தியில் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியராகவும் பின் அதிபர் என்ற முறையிலும் யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்துடன் நீண்ட காலம் ஒன்றுபட்டு உழைத்தவர் அவர்.

— இப்படி அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## இந்திய - ஸ்ரீலங்கா உறவை வளர்க்க பிரிட்டன் முயற்சியாம்

லண்டன், ஜூன் 20

இந்தியாவுடனான உறவுகளை வளர்ப்பதற்கு ஸ்ரீலங்காவுக்கு உதவப் போவதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

தன்னைச் சந்தித்த ஸ்ரீலங்கா நிதிஅமைச்சர் றொனி டி மெல்விடம் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜெப்ரி ஹோ இப்படித் தெரிவித்தார்.

இச்சந்திப்பு வெள்ளியன்று இடம்பெற்றது.

பாரிஸில் இம்மாதம் 25ஆம் திகதி ஸ்ரீலங்காவுக்கு உதவும் 14 நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ளது.

அதற்குச் செல்லும் வழியில் பிரிட்டனின் ஆதரவைத் திரட்ட நிதி அமைச்சர் றொனி டி மெல் லண்டன் சென்றிருக்கிறார்.

—அப்போதே இச்சந்திப்பு நடைபெற்றது. (உ-எ)


ஐக்கிய அரபு எமிரேட்ஸில் (U A E)

**வேலைவாய்ப்பு**

★ **சாரதிகள் (Driver)**

(பாரம் கூடிய, பாரம் குறைந்த வாகனங்களைச் செலுத்துவதற்கான — ஐக்கிய அரபு எமிரேட்ஸின் — செல்லுபடியான சாரதி லைசென்ஸ் அவசியம்)

★ **கொள்வனவு அதிகாரி (PURCHASING OFFICER)**

(அரபு, ஆங்கில மொழித் தேர்ச்சியுடன் முன் அனுபவமும் அவசியம்)

உடனடியாக நேரில் தொடர்பு கொள்ளவும்

தம்முடன் கறுப்பு வெள்ளைநிற பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள்— 21, முன் அனுபவம் குறித்த சான்றிதழ்களையும், பாஸ்போர்ட், தடுப்பூசிச் சான்றிதழ் ஆகியவற்றையும் கொண்டு வரவும்.

**ரவிலங்கா லிமிட்டெட்,**

1 ஏ, ஸ்டவ்ஸ் பிளேஸ்,

கொழும்பு -- 5


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை. ஒருவனும் தனக்கு என்று மரிக்கிறதுமில்லை.

— பைபிள்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

21.6.1987 த. பெ. இல: - 23


## இதுவும் ஒரு தந்திரமா?

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இந்தியாவின் மத்தியஸ்தப் பணியை ஏற்பதற்கு, ஸ்ரீலங்கா இப்போதும் தயார்.

இவ்வாறு புதுடில்லியில் வைத்து ஸ்ரீலங்காவின் வெளியறவு அமைச்சர் ஐஹுப் சாஹுல் ஹமீத் தெரிவித்திருக்கிறார்.

அங்கு இரண்டு நாட்களாக நடைபெற்ற தென்னாசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புச் சங்க (சார்க்) அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் கலந்து கொண்ட பின்னரே அமைச்சர் ஹமீத் இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இந்தியா விமான மார்க்கமாக வந்து யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கியதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில், சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளாதிருப்பது குறித்து ஸ்ரீலங்கா முதலில் ஆலோசித்து வந்தது. எனினும் கடைசியில் அந்த முடிவை மாற்றிக்கொண்டு மாநாட்டில் கலந்து கொண்டது.

சார்க் மாநாட்டில் ஸ்ரீலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடக்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட அமர்க்களங்கள் இடம் பெறுமலேயே போய்விட்டன. அதுவேறு விடயம்.

கடந்த நான்கு வருட காலத்தில், இந்திய—ஸ்ரீலங்கா உறவு ஒருக்கால் சூடாகவும், மறுநேரம் தட்பமாகவும் மாறி மாறி இருந்து வருகிறது. இனப்பிரச்சினையும் அதில் இந்தியா மத்தியஸ்தராக வந்ததுமே அவ்வாறான மாற்ற நிலைகளுக்குக் காரணமாக இருந்தன.

யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றி வந்த இந்தியப் படகுகளை முகத்தில் அறைந்தாற்போல, ஸ்ரீலங்கா திருப்பி அனுப்பிய சம்பவமும்—

அதற்குப் பதிலடி கொடுப்பது போலவும், பாடம் புகட்டுவது போலவும் இந்தியா நிவாரணப் பொருள்களை விமான மூலம் கொண்டு வந்து தரை இறக்கிய சம்பவமும்—

இந்திய- ஸ்ரீலங்கா உறவு முறிந்து போய் விடுமோ என்ற உச்சக் கட்டத்தை— நெருக்கடியைத் தோற்றுவித்தன. ஸ்ரீலங்காவும் இந்தியாவும் எதிரி நாடுகளாக மாறி விடும் உச்சப் புள்ளிக்கும் நிலைமை மோசமாகியது.

ஸ்ரீலங்கா அரசும் அதன் தலைவர்களும் இந்தியாவை வாய்க்கு வந்தபடி எல்லாம் வசை பாடினர். தாமே பின்னுக்கு நின்று இந்திய எதிர்ப்பு ஊர்வலங்களையும் இயக்கங்களையும் செய்வித்தனர்.

இடையில் சிறிது மனம் மாறியவர்களாய், இந்தியாவுடன் தாம் பகைமை கொள்ள விரும்பவில்லை என்று காட்டிக் கொள்வதற்காக (அது வெறும் நடிப்பு என்றே கொள்ள வேண்டும்) யாழ் மக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்க அனுமதித்து ஒப்பந்தமும் செய்து கொண்டனர்.

அது மட்டுமன்றி,—

எமது விடயத்தில் தலையிட நீர் யார் என்ற தொனியில் பேசிய அரசின் வெளிவிவகார அமைச்சர், இந்திய மத்தியஸ்தப் பணியை மீண்டும் ஏற்கத் தயார் என்றும் அறிவித்திருக்கிறார்.

இவை—

இனப்பிரச்சினையைக் கையாளும் விடயத்திலும், இந்தியாவுடனான உறவைப் பேணும் விடயத்திலும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்குள்ளேயே பன்முகக் கொள்கைப் பிரிவுகள் உண்டு என்பதை ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது.

தாம் இந்தியாவுக்கு எதிரானவரா அல்லரா என்பதை வெளிப்படையாக இனங்காட்டாத விதத்தில் வெகு தந்திரமாக நடந்து கொள்கிறார் ஜனாதிபதி.

பிரதமரும், பந்தோபஸ்து அமைச்சரும் தாம் இந்தியாவுக்கு எதிரானவர்கள் என்பதை வெளிப்படையாகவே காட்டிக் கொள்கிறார்கள்.

நிதிமந்திரி, வெளிவிவகார மந்திரி, காணி அமைச்சர் போன்றோர் இந்தியாவை 'மேவிப்' போகவேண்டும் என்ற சிந்தனையுடன் காணப்படுகிறார்கள்.

ஹமீத் புதுடில்லியில் வெளியிட்ட கருத்தும், (சொல்லும்), லலித் பாகிஸ்தான், அமெரிக்காவுக்குச் செல்லும் செயலும், சீனாவைத் தமது நட்புநாடாக அரசு காட்டிக் கொள்வதும் ஒன்றுக்கு மற்றது முரணாகவே உள்ளது.

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்திய மத்தியஸ்தத்தை ஏற்கத் தயாராக இருப்பதாகக் கூறிக்கொண்டு இந்தியாவின் எதிர் நாடுகளான சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றிடம் ஆயுதங்களை வாங்குவதும், பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்ய முயல்வதும், அமெரிக்காவின் உதவியை நாடுவதும் ஸ்ரீலங்கா அரசுக்குள்ளேயே முரண்பட்ட பலமுனைக் கொள்கை இருப்பதையும், தெளிவற்ற நிலையையும் காட்டுகிறது.

வெளித் தோற்றத்துக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லிக்கொண்டு, மறைமுகமாக அல்லது இரகசியமாக செய்யவேண்டியதையும் செய்துவிடும் தந்திரமாகவும் இது இருக்கலாம்,

# ஸ்பெயினில் குண்டு வெடிப்பு

## 15 பொதுமக்கள் பலி!

மாட்ரிட், ஜூன் 20

ஸ்பெயினில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற கார்க் குண்டு வெடிவிபத்தில் 15 பொதுமக்கள் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

துறைமுக நகரான பார்சிலோனாவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சந்தைப் பகுதியில் பொதுமக்கள் நெருக்கமாகக் கூடியிருந்த சமயம் இக்கார்க் குண்டு வெடித்தது.

இதற்கு பாஸ்க் இன தீவிரவாதிகள் இயக்கம் உரிமை கோரியுள்ளது.

ஸ்பெயினில் பாஸ்க் இனத்துக்கு என்று தனி நாடு கோரி இத் தீவிரவாதிகள் போராடி வருகின்றனர். (உ-எ)

### மூவர் பலி!

புதுடில்லி, ஜூன் 20

திரிபுரா மாநிலத்தில் கடந்த வெள்ளி இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் மூன்று பேர் உயிரிழந்தனர். (உ- )

### ஓலைக்குடிசைகள் தீப்பற்றி எரிந்தன

சென்னை, ஜூன் 20

சென்னை நகரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற தீவிபத்தில் நூறுக்கும் அதிகமான ஓலைக்குடிசைகள் எரிந்து சாம்பராகின.

ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் மரணமானான்.

தீவிபத்துக்கான காரணம் தெரியவில்லை. (உ-எ)

## வால்ட்ஹீமை சந்திக்க திருத்தந்தை இணக்கம்

### யூதர்கள் மத்தியில் அதிருப்தி

நியூயோர்க், ஜூன் 20

ஆஸ்திரிய ஜனாதிபதி குர்ட் வால்ட் ஹீமைச் சந்திக்க பரிசுத்த பாப்பாண்டவர் சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

இம்மாதம் 25 ஆம் திகதி இச்சந்திப்பு இடம் பெறும்.

இச்சந்திப்புக்கு பாப்பாண்டவர் சம்மதம் தெரிவித்தது அமெரிக்காவில் உள்ள யூதர் அமைப்புக்களுக்கு ஆத்திரத்தைக் கொடுத்துள்ளது.

நாஸி இராணுவத்தில் பணியாற்றியவர் என்ற காரணத்துக்காக ஜனாதிபதி வால்ட்ஹீம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதற்கு உத்தியோக ரீதியில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஹிட்லருடன் சேர்ந்து பணியாற்றியதற்காக திரு. வால்ட் ஹீமைத் தனிமைப்படுத்தும் முயற்சி தீவிரமடைந்துள்ள இத்தருணத்தில் பாப்பாண்டவர், வால்ட் ஹீமைச் சந்திப்பதா? என்று கேட்கப்படுகின்றது. (உ-எ)

## நாடாளுமன்றத்திற்கு நிர்வாணமாகப் போக விரும்பும் எம். பி!

ரோம், ஜூன் 21

நான் நிர்வாணமாகவே நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்புகின்றேன்.

— இத்தாலி நாடாளுமன்றத் தேர்தலில் எம். பி.யாகத் தெரிவு செய்யப்பட்ட கவர்ச்சி நடிகை இலோனா ஸ்டோலர் இப்படித் தெரிவித்தார்.

தீவிரவாதக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு இவர் வெற்றி பெற்றார்

இவர் பல ஆபாசப் படங்களில் நடித்தவர். தேர்தல் பிரசார கூட்டங்களில் துகிலுரிந்து கவர்ச்சி காட்டி ஆதரவு தேடியவர்.

தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் இந்த நடிகை கடந்த புதன்கிழமை வாக்காளருக்கு நன்றி தெரிவிக்க கூட்டம் நடத்தினர்.

அப்போதும் அவர் வாக்காளருக்குக் கவர்ச்சி காட்டினார் ஆதரவாளர்கள் அவரைச் சூழ்ந்து கொள்ளவே பொலீஸார் விரைந்து சென்று காப்பாற்றினர்.

நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்துக்கு செல்வது பற்றி அவர் சொன்னதாவது;

''நான் என்ன உடை அணியவேண்டும் என்பது எனக்கே தெரியவில்லை.

உண்மையைச் சொல்லுகின்றேன். முழு நிர்வாணமாகச் செல்லவே நான் விரும்புகின்றேன். அது இயற்கையாக இருக்கும் அல்லவா!

ஆனால் நான் உடை அணிந்து செல்ல வேண்டும் என்று கூறுகிறார்கள்.

உண்மையில் ஆடை அணிவது எனக்குப் பிடிக்க வில்லை.''

— இப்படி கவர்ச்சி எம். பி. தெரிவித்தார். (உ-எ)

## வளைகுடாவிலும் எவாக் விமானங்கள்

வாஷிங்டன், ஜூன் 20

வளைகுடாவில் எவாக் உளவு விமானங்களைப் பயன்படுத்த அமெரிக்கா தீர்மானித்து உள்ளது.

இதற்குத் தேவையான தள, மற்றும் வசதிகளைச் செய்துகொடுக்க சவூதி அரேபியா முன் வந்துள்ளது.

வளைகுடாவைப் பாவிக்கும் சகல கப்பலின் நடமாட்டங்கள், மற்றும் தாக்குதல்களை முன்கூட்டியே அறிந்துகொள்ள எவாக் உளவு விமானங்களைப் பயன்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

இப்படி பென்டகன் அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-எ)

ஏவுகணைத் தாக்கிற்கு இலக்கான

## அமெரிக்க கப்பலின் கப்டனுக்கு கல்தா

வாஷிங்டன், ஜூன் 20

வளைகுடாவில் ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கான அமெரிக்க யுத்தக் கப்பல் 'ஸ்டார்க்' கின் கப்டன் பதவியில் இருந்து விலக்கப்பட்டார். இவர் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடற்படைச் செயல் அலுவலகத் தலைமையதிகாரி இதுசம்பந்தமான உத்தரவைப் பிறப்பித்தார்.

இவருடன் 'ஸ்டார்க்' யுத்தக்கப்பலின் வேறு இரண்டு சிரேஷ்ட அதிகாரிகளும் வாஷிங்டனுக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

ஏவுகணைத் தாக்குதலில் 'ஸ்டார்க்' கப்பலில் பணியாற்றிய வீரர்களில் 37 பேர் கொல்லப்பட்டனர் என்பதுதெரிந்ததே. (உ-எ)

### வெளி உலகில்

## கூர்க்காலந்து கோரி வேலைநிறுத்தப் போர்

டார்ஜீலிங், ஜூன் 20

கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணியின் 13 நாள் வேலை நிறுத்தம் நேற்று (சனி) ஆரம்பமானது.

கூர்க்காக்களுக்கு தனி நாடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த வேலை நிறுத்தம் நடைபெறுகின்றது.

வேலை நிறுத்தம் தொடங்கிய முதல்நாள் அதிகாலை, அரசுக்குச் சொந்தமான கட்டடம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.

இதனால் 30 லட்சம் ரூபாவரையில் சேதம் ஏற்பட்டதாகடார்ஜீலிங் நீதிவான் தெரிவித்தார்.

## இந்தியா - ஸ்ரீலங்கா தகராறில் ஐ. நா. தலையிடமாட்டாது

ஜெனீவா, ஜூன் 20

இந்தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் இடையேயான பிரச்சினைகளில் ஐக்கியநாடுகள் சபை தலையிடமாட்டாது,

ஐ. நா. செயலாளர் நாயகம் திரு. பெரஸ் டி குயிலர் இதனை பி.ரி.ஐ செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையேயான பிரச்சினைகளில் ஐ. நா. எவ்வித பங்கையும் வகிக்காது.

இருதரப்புப் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைகளுக்கு இரண்டு நாடுகளும் தீர்வு காணவேண்டும்.

பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நான் தலையிடவேண்டும் என்று இந்தியாவோ, ஸ்ரீலங்காவோ கேட்கவில்லை.

இப்படி ஐ. நா. செயலாளர் நாயகம் தெரிவித்தார். (அ-எ)

# அடிப்படை உரிமைகள் மீது அரசு நடத்தும் தாக்குதல்கள்

## 3 கட்சிகள் கூட்டாகக் கண்டனம்

இதுவரையிலும் எஞ்சியுள்ள ஜனநாயக உரிமைகள், நடைமுறைகள், நிறுவனங்களின் மீது புதிய தாக்குதல்களை நடத்த யூ. என். பி. அரசு ஆவலுற்றிருப்பது வெளிப்படை.

1982 இல் நடத்தப்பட்ட 'சர்வஜன வாக்கெடுப்பு' ஏமாற்றுக்கு முன்னதாக அதை நியாயப்படுத்த பிரலாபிக்கப்பட்ட போலி 'நக்ஸலைட்' பீதியைப் போன்ற ஒன்றை மீண்டும் கிளப்பி விடுவதும் —

நாடு பூராவும் சிறைபிடித்தல், கைதுகளைத் தீவிரப்படுத்துவதும்—

தமது சொந்த 'அடியார் கோஷ்டி'— உளவுக் கும்பல்களை அமைக்கும்படி யூ. என். பி. நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி கேட்டிருப்பதும் இதற்கான ஆதாரங்களாகும்.

இவையனைத்துக்கும் மேலாக அண்மித்துக் கொண்டிருக்கும் ஜனாதிபதி, நாடாளுமன்றப் பொதுத்தேர்தல்களை தள்ளிப்போடுவதற்குரிய வாய்ப்புகளைப் பற்றி ஜனாதிபதி ஜயவர்த்தனா திரும்பத் திரும்ப வெளியிட்டு வருவதை மிக உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

அது பொதுத் தேர்தலை நடத்தாது 'சர்வஜன வாக்கெடுப்பு' ஏமாற்றினை நடத்தி நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பலத்தினைத் தந்திரமாக காத்து வருவதன் மூலம் இவ்வாறான அடக்குமுறையை இந்த அரசினால் தொடர முடிகிறது.

மேலும் இவ்வாறு நடக்க - இலங்கை வரலாற்றிலேயே நீண்டகாலமாக - அவசரநிலைச் சட்டத்தை நீடித்து அதன் கீழ் அடக்குமுறைப் பயங்கரச் சட்டங்களைப் போட்டுத் தனக்கு வழியமைத்துள்ளது.

அத்துடன் 1979 பயங்கரவாதத் தடுப்பு என்ற போலிச் சட்டத்தையும் இதற்குப் பின்னணியாகக் கொள்ளப்படுகிறது.

இந்தச் சட்டத்தினால் அரச அல்லது தனிநபர் பயங்கரவாதம் கட்டுப்படுத்தப் பட்டதாகத் தெரியவில்லை. மாறாகப் பயங்கரவாதம் வளர்ச்சி பெற்றே வந்துள்ளது.

எனினும் இவைகளின் மூலமாக அரச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும் எந்த ஒருவரையும் 18 மாதங்களாக தடுப்புக் காவலில் வைத்திருக்கும் பெரும் அதிகாரங்களை அரசு கையில் எடுத்துக் கொண்டது. அநேக சந்தர்ப்பங்களில் விசாரணை அல்லது குற்றம் எதுவுமில்லாமல் கைது செய்யப்பட்டவர்கள் 18 மாத நீண்டகாலம் சிறைவைக்கப்படுவது வழக்கமாகி விட்டது.

யூ. என். பி. ஆட்சியின் கீழ் இலங்கை மென்மேலும் இராணுவ முறைக்குத் திரும்புகிறது; நாட்டின் மூன்றிலொரு பகுதியில் சிவில் நிர்வாகம் இல்லாதுள்ளது.

இந்த அரசு, உலக வங்கியின் ஆணைகளுக்குக் கட்டுப்படுவதும்—

அமெரிக்கக் கப்பல் படைக்குத் திருகோணமலையில் வசதி செய்து கொடுக்க எத்தனித்ததும் —

'அமெரிக்க குரல்' வானொலிக்கு பிரசார [illegible]

விவகாரங்களிலும் இஸ்ரேலுக்கும் அந்நாட்டு விசேஷ பிரதிநிதித்துவ நிறுவனத்துக்கும் அளிக்கப்பட்ட அந்தஸ்தும்—

இந்திய விரோதக் குரலை உரக்க ஒலிப்பதன் மூலமும் காட்டிவரும் அக்கறை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடனும், அவர்களின் கூட்டாளிகளுடனும் தேசிய — சர்வதேசிய ரீதியான அரசியலில் படிப்படியாக அது இணைந்துள்ளதையே காட்டுகின்றது.

> லங்கா சமசமாஜக் கட்சி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா மக்கள் கட்சி ஆகியவை கூட்டாக விடுத்துள்ள அறிக்கை இதுவாகும்.

அத்துடன் ஜனநாயகத்திற்கு எதிராகச் செயற்படும் அரசு இவ்வாறான தாக்குதல்களின் மூலமாக ஜனநாயக நடைமுறைகளின் மீது ஒட்டு மொத்தத் தாக்குதலை நடத்துவதுடனும் இவ்வுறவுகள் பிணைந்துள்ளன.

மக்களின் வாழ்க்கைத் தரங்களையும், சமூக— சேமநல சேவைகளையும், தொழில் வாய்ப்புக்களையும் ஒட்டுமொத்தமாக பாழடிப்பதற்கு முன்னோடியாகவே யூ. என். பி. அரசு இந்த ஜனநாயக விரோத நடைமுறைகளைக் கையாளுகிறது என்பதை மக்களுக்கு அச்சுறுத்தி வைத்திருக்கிறது.

உலக வங்கியும், ஏகாதிபத்திய நிறுவனங்களும் யூ. என். பி. அரசுக்கு மேலும் உதவிகளை வழங்குவதற்காக இடும் நிபந்தனைகளேதான் இந்தப் பாழடிப்புகள்.

இந்நாட்டில் பூதாகரப்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண அரசு தவறியதனால் ஏற்பட்டுள்ள பயங்கர விளைவுகளில் இருந்து மக்கள் கவனத்தைத் திருப்பவும் அரசு முயலுகின்றது.

எனவே ஜனநாயகத்தை மீண்டும் ஸ்தாபிக்கும், பாதுகாக்கும் போராட்டம் மேற்கூறப்படும் அதிகாரத் துஷ்பிரயோகம், ஒழுங்கீனமான கொள்கைகள் ஆகியனவுக்கு எதிராக நடத்தும் போராட்டங்களுடன் பிணைந்துள்ளது.

இதற்கான மற்றும் பிரச்சினைகளிடையில் மிக முக்கியத்துவம் பெறுவன.

★ மனித உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றை சட்டத்தைப் போன்று செயலிலும் உத்தரவாதப்படுத்தி, பொலீஸ் அல்லது பாதுகாப்பு சேவையினர் கைது செய்துள்ளோரை மனிதாபிமானமற்ற இம்சை, சித்திரவதைகளுக்கு உட்படுத்துவதை உடனடியாக நிறுத்துதல்.

★ அரசியலமைப்பின் ஆறுவது திருத்தத்தை நீக்கவேண்டும். சகல அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் தனியாக அல்லது தாம் வெளியிட்ட அரசியல் கொள்கைகளின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடவும், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறவும் உரிமை இருக்க வேண்டும்.

நாட்டில் நிலவும் அமைதியின்மையால் பொதுத் தேர்தல் நடைபெறுவது தடைப்படுகிறது என்று அரசு கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. இந்த நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை நீட்ட இன்னொரு தடவை சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முடியுமானால் புதிய நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்யும் பொதுத் தேர்தலையும் நடத்த முடியுமென்பது ஐயத்திற்கிடமற்றது.

மேலும் 1988 ஜனவரி 1 ஆம் திகதி முதல் அமுலாக்கக் கூடியவாறு பிரதேச சபைகள் 257க்கான நாடு தழுவிய 'சிற்சிறு' பொதுத் தேர்தல்களை நடத்தப்போவதாக அண்மையில் அரசாங்கம் அறிவித்தது. அரசின் கருத்துப்படி தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறு செய்ய முடியுமானால் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்படும் பிரதேச சபைகளுடன் ஒப்பிடும்போதும் ஐந்து வருட காலமாக தாமதப்பட்டுள்ள பொதுத் தேர்தலை நடத்த மறுப்பது ஏன்?

★ புதிய ஜனாதிபதித் தேர்தலையும் தவணை போடக் கூடாது. அது குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னதாக நடைபெறக் கூடியவாறு இவ்வரசு உத்தரவாதப் படுத்த வேண்டும். (உ-க)



### பொய்யாமொழி

**குறள்:**
பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

**பொருள் :**
காலத்தோடு பொருந்துமாறு ஆராய்ந்து நடத்தல், (நில்லாத இயல்பு உடைய) செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LONDON EXAMS
I. D. P. M. — Parts I & II
A. A. T. — All Stages
I. . B. — all stages
Week end Classes
Commencement 27 - 6 - 87
Cantabia Institute
(Shoot of Oxonia, Colombo)
13, Rasavinthodam Lane,
(ஸ்ரான்லி றோட் முடிவுக்கருகாமையில்)
JAFFNA.

# உதயன்

21 — 06 — 1987 ஞாயிற்றுக்கிழமை

I. C. M. A. Stage: I Weekends
Economics Mr. S. Kathirgamanathan
Business Law - Mr. Eugene Mariampillai
Accounting Mr. S. P. Sivapathasundaram
QuantitativePopular Varsity MethodLecturer
Commencement 27-6-87
Cantabia Institute
(Shoot of Oxonia Colombo)
13, Rasavinthodam Lane,
(ஸ்ரான்லி றோட் முடிவுக்கருகாமையில்
JAFFNA

## தேவிலால் பதவியேற்பு

புதுடில்லி, ஜூன் 21

ஹரியாணு முதலமைச்சராக 73 வயதான தேவிலால் நேற்று பதவி ஏற்ருர்.

புதுடில்லியிலுள்ள ஹரியாணு பவனில் இந்த வைபவம் நடந்தது. ஆறு அமைச்சர்களும் முதலமைச்சருடன் பதவி ஏற்றனர்.

லோக்தள் கட்சி எம்.எல். ஏக்கள், எம்.பிகள் நேற்றுக் கூடி, எதிர்பார்த்தபடி தங்கள் தலைவராக திரு. தேவிலாலைத் தெரிவு செய்தனர். (உ-எ)

## தேவிலாலுக்கு ராஜீவ்காந்தி பாராட்டு

புதுடில்லி, ஜூன் 21

ஹரியாணு முதலமைச்சராக பதவி ஏற்ற திரு. தேவிலாலுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று பாராட்டுத் தெரிவித்தார்.

ஹரியாணு சட்டசபைத் தேர்தலில் 86 தொகுதிகளின் முடிவுகள் வெளியாகிவிட்டன.

ஒரு தொகுதியில் வாக்கு எண்ணப்படுவது ரத்துச் செய்யப்பட்டது. வாக்குப் பெட்டிகள் தீக்கிரையானதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மூன்று தொகுதிகளுக்கான தேர்தல் ஒத்திப் போடப்பட்டுள்ளன. சுயேச்சை உறுப்பினர்கள் மூவர் காலமானதாலேயே அவை ஒத்திப் போடப்பட்டன.

86 தொகுதிகளின் இறுதி நிலைவரம் வருமாறு;

| | |
|---|---|
| லோக்தள் பாரதியஜனதா கூட்டணி | - 73 |
| இந்திரா காங். | - 05 |
| மார்க்ஸிஸ்ட் கம்யூ | - 01 |
| இந்திய கம்யூ | - 01 |
| சுயேச்சை | - 06 |

[உ-எ]

## அதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

புனர்வாழ்வு அமைச்சின் வடமராட்சிப் பகுதிக்கான தொடர்பு அதிகாரியாக திரு. எஸ். யோகநாதன் அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தற்போது பொது நிர்வாக அமைச்சில் சேவையாற்றுகிருர். (உ ள)

## பஸ், லொறி மீது சூடு!

கொழும்பு, ஜூன் 21

சந்தளாய் – ஹபறணை வீதியில் கடந்த பெரிய வெள்ளிக்கிழமை படுகொலைகள் நடந்த இடத்தில், கடந்த வியாழன் ஒரு பஸ், ஒரு லொறி ஆகியன மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் பொலீஸாரின் அறிக்கை ஒன்று இதனைத் தெரிவித்தது.

தீவிரவாதிகளே வாகனங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

அப்பாவித் தமிழர் கொல்லப்படும்போது

# தெற்கில் இடதுசாரிகள் மௌனம் சாதிப்பதுஏன்?

## வெட்கக்கேடான விடயம் என அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடபகுதியில் இராணுவத் தாக்குதலினுல் அப்பாவி மக்கள் நூற்றுக் கணக்கில் கொல்லப்படுவது குறித்து தென்னிலங்கையில் தொழிலாளர் வர்க்கமோ அல்லது இடதுசாரிகளோ கண்டனம் தெரிவிக்காதது வெட்கக்கேடான விஷயம்.

—இப்படி கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் தமிழ்ச் சகோதரர்களை விமானங்களில் இருந்து குண்டுகளை வீசி அழிப்பதை எதிர்த்து தென் இலங்கையில் உள்ள மக்கள் சுண்டுவிரலைத் தூக்கிக் கூடக்காட்டவில்லை.

ஸ்ரீலங்கா எதிர்நோக்கும் மிக மோசமான பிரச்சினை தமிழர் பிரச்சினைதான்.

சிங்கள ஆதிக்க அரசாங்கங்கள்அடுத்தடுத்து தமிழர்கள் மீது காட்டி வந்த பாரபட்ச நடவடிக்கைகளின் எதிரொலி தான் இன்று தமிழர் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

பாரபட்சநடவடிக்கைகளை அமைதியாக தமிழர்கள் எதிர்த்தனர். அது பலனளிக்கவில்லை. அதன்பலன்தான் தமிழ் இளைஞர் நடத்தும் ஆயுதப் போராட்டம்.

இராணுவநடவடிக்கை மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. அரசியல் தீர்வு தான் காணப்படவேண்டும்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.(உ-எ)

தமிழர் குழுக்களுடன் பேச

## கத்தோலிக்க குழு சென்னை செல்லும்

கொழும்பு, ஜூன் 21

ஸ்ரீலங்கா கத்தோலிக்க பிஷப் அமைப்பின் தூதுக் குழு ஒன்று விரைவில் சென்னை சென்று தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்த இருக்கின்றது.

தமிழர் அமைப்புக்களின் தலைவர்களைச் சந்திக்கும் முன்னர், இக்குழு சென்னை ஆர்ச். பிஷப் கசிமிர் ஞானதிக்கனைச் சந்திக்கும்.

ஆர்ச்பிஷப் ஞானதிக்கன் தற்போது ரோம் நகரில் இருக்கிருர்.

ரோமில் இருந்து அவர் சென்னை திரும்பிய பின்னரே ஸ்ரீலங்கா பிஷப் அமைப்புக் குழு சென்னைப் பயணத்துக்கான திகதியை நிர்ணயிக்கும்.

இது பற்றிய தகவல்களை ஸ்ரீ லங்கா பிஷப்கள் சார்பில் வண பிதா நீல் கருணுரத்தின வெளியிட்டார்.

கொழும்பு அரசுக்கும் தமிழர் அமைப்புக்களுக்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சில ஆக்கபூர்வமான .யோசனைகளுடன் தான் சென்னை செல்ல இருக்கின்ருேம் என்ருர் அவர்.

ஆனுல் அந்த யோசனைகள் பற்றிய விவரங்களை அவர் வெளியிடவில்லை. (உ-எ)

## யாழ்நகர், உடுவிலில்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து நகரின் பல பகுதிகளிலும் மூக்கை அரிக்கும் தன்மையுள்ள நெடில் வீசியது.

விமானத் தாக்குதலையடுத்து கோட்டை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

### உடுவிலில்

யாழ்ப்பாணத்தில் பொம்மர் விமானங்கள் தாக்குதல் நடத்திய பொழுது உடுவில் பகுதியிலும் இரண்டு பொம்மர் விமானங்கள் பலத்த தாக்குதல் நடத்தின.

இதனுல் மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

உடுவில் மகளிர் கல்லூரியும்சேதமடைந்தது. பெண்மணி ஒருவரும், சிறுமி ஒருவரும் காயமுற்றனர்.

உடுவில் டச்சு வீதியில் கனகலிங்கம் என்பவரது வீடும், அவரது உறவினர் ஒருவரின் வீடும், மற்றுமொரு வீடுமே பலத்த சேதமடைந்தன.

உடுவிலில் மட்டுமன்றி சுற்றுடல் கிராமங்களிலும் இந்த பொம்மர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன.

சுமார் இருவார காலத்தின் பின்னர் நேற்று நகரில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆகக் கடைசியாக இம் மாதம் ஏழாம் திகதி நகரில் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

### அரசு அறிவிப்பு

இதே வேளை அரச ரூபவாஹினி தொலைக்காட்சி யாழ்ப்பாணத்திலும்,உடுவிலிலும் குண்டு வீச்சு நடத்தப்பட்டதாக அறிவித்தது.

யாழ்ப்பாணம் கோட்டை முகாமுக்கு கடந்த இரண்டு நாட்களாக மோட்டோ ஷெல் வீச்சு நடத்தப்பட்டதாகவும் –

அதனைத் தொடர்ந்தே யாழ்ப்பாணத்தில் போராளிகள் தளம் ஒன்றின் மீதும், அருகில் உடுவிலில் உள்ள மோட்டோ குண்டு தயாரிக்கும் தொழிற்சாலை மீதும் குண்டு வீசப்பட்டதாகவும் - அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டது,

(உ-10-68-143)

## முள்ளி . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிப்பாய்கள் கவச வாகனங்கள் சகிதம் ஷெல், துப்பாக்கி பிரயோகங்களை மேற்கொண்டவாறு கொடிகாமம் பக்கமாக முன்னேற முயன்றனர்.

இந்தச் சிப்பாய்களை விடுதலைப் புலிகள் எதிர்த்து தாக்கினர்.

எதிர் தாக்குதலை சமாளிக்க முடியாது சிப்பாய்கள் கறுக்காய் பிள்ளையார் கோவிலுடன் திரும்பி முகாம் சென்றனர்.

அதன் பின்னர்–சுமார் 4 மணி நேர தாமதத்துடன் – பயணிகள் தத்தமது பஸ்களில் ஏறிச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (உ-ள-160)

## அஸாமில் வெங்கட்ராமனுக்கு எதிர்ப்பு

கௌஹாத்தி, ஜூன் 21

இந்திய ஜனுதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளரை ஆதரிக்கப்போவதாக அஸாம் மாநில முதலமைச்சர் பிரபுல்ல மஹந்தா அறிவித்திருக்கிருர்.

எனது கட்சியான அஸாம் கண பரிஷத் எம். எல். ஏக்கள், எம். பிக்கள் எதிர்க்கட்சி வேட்பாளருக்கே வாக்களிப்பர். காங்கிரஸ் வேட்பாளர் திரு. வெங்கட்ராமனுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

இப்படி முதலமைச்சர் திரு. மஹந்தா தெரிவித்தார். (உ-எ)

## வகுப்புகள் தொடர்ந்து நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 21

திறந்தபல்கலைக்கழகத்தின் உயர் தொழில் ஆங்கில பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் தொடர்ந்து யாழ் பிரதேச அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றன.

இதுவரை சமுகமளிக்காத பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட நேரசூசியின்படி விரிவுரைகளுக்குத் தொடர்ந்து சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவ் வேண்டுகோளை யாழ் பிரதேச அலுவலக உதவிப் பணிப்பாளர் திரு. ந. மகாதேவன் விடுத்திருக்கிருர். (உ-எ)

## உணவு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திரைகள் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு லட்சத்து பத்தாயிரம் குடும்பங்கள் இதனுல் பயனடைய உள்ளன.

ஜூன் மாதத்திற்கான உணவுப் பொருள்களை மக்கள் உடன் பெறத்தக்க விதத்தில் முத்திரைகள் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ் செயலகத்தின் பொதுசனத் தொடர்பதிகாரி திரு.த. குலசேகரம் தெரிவித்துள்ளார். (உ-ள)

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில்

## மருத்துவ வசதியின்றி ஒருவர் மரணம்!

கிளிநொச்சி, ஜூன் 21

பென்சிலின் ஊசி ஒத்துக்கொள்ளாததைத் தடுத்து நிறுத்த போதிய மருத்துவ வசதி இல்லாததால் கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு வந்தவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

மேற்படி சம்பவம் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் கடந்த புதன் மாலை இடம்பெற்றது.

இணுவிலைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை ஆனந்தன் என்பவரே இப்படி உயிரிழந்தார்.

சம்பவதினம் கிளிநொச்சி வைத்தியசாலையில் அவருக்கு பென்சிலின் ஊசி ஏற்றப்பட்டதாகவும் இதன் பின்னர் இந்த ஊசி இவருக்கு ஒத்துக் கொள்ளாததால் இவர் மயக்கமுற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அதனையடுத்து அவசர சிகிச்சை அளிக்க முயற்சி எடுக்கப்பட்டதாகவும்–

ஒட்சிசன் உட்படப் போதிய மருந்து வசதி இன்மை காரணமாக தகுந்த சிகிச்சையளிக்க முடியாத நிலையில் இவர் பரிதாபமாக உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி திரு. கே. திருலோகமூர்த்தி நடத்தினுர்.

சாட்சியங்களை கிராம சேவகர் எம். தர்மபாலன் நெறிப்படுத்தினுர்.

அங்கு சாட்சியமளித்த கிளிநொச்சி வைத்தியசாலை டாக்டர் கே. சிவகுமாரன் தமது சாட்சியத்தில்–

இவ் வைத்தியசாலையில் போதிய மருந்து வசதிகள் இல்லை. தகுந்த வசதிகள் செய்துகொடுக்கப்பட்டால் மட்டுமே இதுபோன்ற விபரீதங்கள் நிகழாமல் தடுத்து நிறுத்த முடியும் என்ருர். (உ-76)

சார்க் மாநாடு:

## ஸ்ரீலங்கா செலவுகளை ஸ்ரீலங்காவே ஏற்கும்

### ராஜீய மட்டத்தில் சீரற்ற உறவு

புதுடில்லி, ஜூன் 20

சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டை ஒட்டி இந்திய அரசு அளித்த எந்த ஒரு விருந்து வைபவத்திலும் ஸ்ரீ லங்கா கலந்து கொள்ளவில்லை.

கடந்த புதன் இரவு இந்திய வெளியுறவு அமைச்சர் நாராயண்தத் திவாரி அளித்த விருந்திலும் அமைச்சர் ஹமீது கலந்து கொள்ளவில்லை என்று தெரிய வருகிறது.

இதேவேளை மாநாடு தொடர்பாக இலங்கைக் குழுவுக்கு புதுடில்லியில் ஏற்பட்டுள்ள செலவுகளை இந்தியா ஏற்கவேண்டியதில்லை; ஸ்ரீ லங்கா அரசே அதனை ஏற்றுக்கொள்ளும்– இப்படி புதுடில்லிக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது என்று கொழும்பில் அரசுப் பேச்சாளர் ஒருவர் சொன்னுர்.

ஸ்ரீலங்காவின் ஆகாயப் பிராந்தியத்தில் நடந்த இந்திய ஊடுருவலைக் கண்டிக்கும் முகமாகவே இந் நடவடிக்கை என இந்தியாவுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுவிட்டதாம்.

ஏற்கனவே வெளியுறவுச் செயலாளர்களுக்கான விருந்துபசாரத்தையும் ஸ்ரீலங்கா பகிஷ்கரித்து விட்டது.

புதுடில்லியில் அமைச்சர் ஹமீதின் நிகழ்ச்சிகளைப்படம் பிடிக்க கொழும்பில் இருந்து தொலைக் காட்சிக்குழு ஒன்றும் சென்றது.

இது பற்றி அப் பேச்சாளர் கருத்து வெளியிடுகையில் –

இந்திய தூரதர்ஷனில் எல்லாம் இடம் பெறுமா என்பது நிச்சயமில்லை. ஒரு பதற்றமான சூழ்நிலையில் செயல்படுகின்ருேம்–என்ருர்

சார்க் மாநாட்டில் கலந்து கொண்ட ஏனைய நாடுகளின் செலவுகளை இந்தியாவேஏற்றுள்ளது. (உ-எ)

## மக்கள் இடம் பெயர்வு

வல்வெட்டித்துறை, ஜூன் 21

நேற்றுமுள்ளிமுகாம்சிப்பாய்கள் முகாமைவிட்டு வெளியேற முயன்றதைத் தொடர்ந்து ரணி, கறுக்காய்ப் பகுதிகளிலுள்ள மக்கள் அச்சத்தால் இடம்பெயர்ந்துள்ளனர்.

வடமராட்சி அசம்பாவிதங்களின்போது இடம்பெயர்ந்த அகதிகள் பலர் இந்தப் பகுதிகளில் வந்து தஞ்சம் அடைந்திருந்தனர்.

தற்போது அவர்கள் மீண்டும் மிருசுவில், பளை பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். (உ-ள-160)

## கைதான...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது தேன்கிளி என்பவர் கடலில் குதித்து நீந்தித் தப்பினுர். மற்றைய நபர் கடற்படையிடம் அகப்பட்டுக் கொண்டார்.

மயிலிட்டிக்கரை பிரசைகள் குழுத் தலைவர் திரு. கே. தங்கலிங்கம், உறுப்பினர் திரு. வி. தங்கேஸ்வரன் ஆகியோர் பலாலி முகாம் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்டதையடுத்து மேற்படி நபர் விடுதலை செய்யப்பட்டார்.

அவருக்கு இராணுவத்தினர் அரை மூடை அரிசியும், அரை மூடை மாவும் வழங்கி மயிலிட்டிக்கு அனுப்பி வைத்தனர். (உ-68)

## இணைப்புக்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு, கிழக்கு பிரசைகள் குழுக்களின், இணைப்புக் குழுவின் விசேட கூட்டம் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும்.

– இப்படி கமிட்டியின் இணைப்புச் செயலாளர் திரு. ச. சிவானந்தராசா அறிவிக்கின்ருர்.. (உ-எ)

## வித்தாரம்

என்ன முரளி! இண்டைக்குக் கொஞ்சம் நேரம் பிந்தி வாருய்?

ஓம், ஓம்! காலமை எட்டு மணி வரைக்கும் ஊரடங்கு எண்டு சொன்னதாலை நீ வழமையான நேரத்துக்கு வராமல் ஊரடங்கு முடியும் எண்டு அறிவிச்ச எட்டு மணியோடையே வந்திட்டாய் போலை.

அவைக்கு என்ன ''மாலை ஆறு மணி தொடக்கம் நாளை காலை எட்டு மணி வரைக்கும் யாழ்ப்பாண மாவட்டத்திலை ஊரடங்கு'' எண்டு திடீர் எண்டு சொல்லிப் போட்டு இருந்துவிட்டினம்.

சனம் எல்லாம் தங்கடை ''யாழ்ப்பாணம் வானொலியை''த் தான் சதா நேரமும் கேட்டுக் கொண்டு இருக்குதுகள் எண்ட நினைப்புப் போலை அவைக்கு.

நேற்றுக் கன சனத்துக்கு பின்னேரம் நாலு ஐஞ்சு மணிக்குத் தான் ஆறு மணிக்கு ஊரடங்கு எண்டது தெரியும்.

போன மாதமும் ஊரடங்கைப் போட்டு பிறகு நீடிச்சு நீடிச்சுக்கொண்டு போனவை. இண்டைக்கும் அப்பிடிச் செய்தாலும் செய்வினம் எண்டு இராத்திரி நான் நினைச்சேன்.

ஊரடங்கு எண்டதும் சனம் சரியாய் பயப்பிடுதுகள்.வடமராட்சியை நினைக்குதுகள்.

அது உண்மையிலை ஒரு வரலாற்றுப் பயங்கரம் தான். வடமராட்சியிலை இருந்து சம்பவங்களை நேரிலை கண்டவை வந்து சொன்னதைக் கேட்கவே மயிர்க்கூச்செறியுது.

''ஒப்பறேஷன் லிபறேஷனு''க்குப் பிறகு ''ஒப்பறேஷன் குட்வில்'' எண்டு சொல்லிச்சினம். ஆனுல் திடீர் எண்டு பழைய பயங்கரத்தையே தொடங்கப் போகினம் போலை எல்லோ இருக்குது...!

பத்துப் பதினைஞ்சு நாள் ஒருமாதிரி அடங்கி இருந்தினம். பிறகு துடங்கியிட்டினம்.

நேற்றைக்குப் பின்னேரம் நடந்த விமானத் தாக்குதல் ''சிக்னல் ஒப்பறேஷ''னுய் இருக்குமோ எண்டும் சனம் கதைக்குதுகள்.

சனம் ஒண்டெண்டாப் பத்தெண்டு எக்கச்சக்கமாய் சொல்லுங்கள்.

இனி என்ன! நடக்கிறதைப் பாக்கவேண்டியதும், முகங்குடுக்க வேண்டியதும் தான்.

★ ★ ★

இரண்டு நாளைக்கு முன்னம் தெரிஞ்சவர் ஒருவர் வந்தார். அவர் வலிகாமம் வடக்குப் பகுதியைச் சேர்ந்தவர். ஒண்டரை மாதத்திலை மூண்டு வீடுகள் மாறி சொந்த இடத்தை விட ஏழு மைல் தள்ளி வந்திருப்பதாகச் சொன்னுர்.

இனி ஏதாவது வந்தால் எங்கை போற தெண்டே தெரியயில்லை. சொந்த வீட்டை விட்டு வந்ததோடை உடைமையள் எல்லாம் போச்சு. இப்ப பரம ஆண்டியின் நிலை தான். உயிர் ஒண்டு தான் மிச்சம். இனி ஏதாவது அப்பிடி இப்பிடி எண்டு வந்தால் ஒண்டும் செய்ய ஏலாது. உயிருக்குத் தான் ஏதாவது நடக்கும். இனிப் பயந்து வேறை இடத்துக்குப் போகமாட்டேன். அதாலை உயிரோடை இருக்கும்போது உங்களை ஒருக்கால் பாத்துவிட்டுப் போவோம் எண்டுதான் வந்தேன் எண்டு கண் கலங்கக் கூறினுர்.

கொஞ்சம் வயது போனவர். எண்டாலும் கஷ்டத்தை அனுபவிச்சு, அனுபவிச்சு, மனப்பயம் அடைஞ்சு, அடைஞ்சு மனதிலை ஒரு முடிவுக்கு வந்தவராய் காணப்பட்டார். உப்பிடி எத்தினை பேர் மன உறுதி அடைவினமோ தெரியாது?

## நிவாரணம் வழங்க ஏற்பாடு

கிளிநொச்சி, ஜூன் 21

யாழ் மாவட்டத்தில் கடந்த 26 ஆம் திகதி முதல் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தை விட்டு வெளியேறி கிளிநொச்சியில் அகதிகளாக வந்து தஞ்சம் புகுந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கையினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. தேவசிகாமணி மேற்கொண்டுள்ளார்.

## கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

முன்னுள் மாநகர சபை முதல்வர் திரு. செ. மகாதேவா இயற்கை எய்தியது குறித்து யாழ் மாநகர வரியிறுப்பாளர் சங்கம் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் தெரிவித்திருக்கிறது.

திரு. மகாதேவா யாழ் மாநகர வரியிறுப்பாளர் சங்கத்தின் தலைவராக கடந்த 12 வருடங்கள் கடமையாற்றியவர்.

அப்பழுக்கற்ற நிர்வாகத்தினை திறம்பட நடத்தி, பலருடைய பாராட்டுகளையும் பெற்றவர் திரு. மகாதேவா என சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(உ-10)

## கொழும்பில் தொழிற்சங்க மாநாடு

கொழும்பு, ஜூன் 21

உலக தொழிற்சங்க மாநாடு கொழும்பில் நவம்பர் மாதம் நடைபெற உள்ளது.

சர்வதேச தொழிற்சங்க மாநாடு ஒன்று கொழும்பில் நடைபெற இருப்பது இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகின்றது

மாநாட்டுக்கான ஒழுங்குகளை ஜனுப். ஏ. அஸீஸ், திரு. எல். டபிள்யு. பண்டித, ஜனுப் அலவி மௌலானு ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (உ எ)

## ஹெலித் தாக்கு

சாவகச்சேரி, ஜூன் 21

வியாழனன்று பகல் 11 மணியளவில் மட்டுவில் வடக்கு சந்தியில் தாழப் பறந்த ஹெலி அப்பகுதியில் வேட்டுக்களைத் தீர்த்தது.

இதனுல் ஒரு பெண் காலில் சிறிது காயம் அடைந்தார். (உ-31)

## ஊர்காவலர் மரணம்

கல்லோயாவில் மூன்று ஊர்காவல் படையினர் மரணம் அடைந்தனர்.

இவர்களின் மரணத்துக்கு தீவிரவாதச் செயல்கள் காரணம் அல்ல என்று விசாரணையில் வெளிவந்தது.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 21-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Sunday June 21, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org